**மார்ச்** 26, 2024

# சிறந்ததொரு ஒன்ராறியோவைக் கட்டியெழுப்புதல்

## ***2024 வரவுசெலவுத் திட்டம்*** ஒன்ராறியோவின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கான ஒரு திட்டத்தை வழங்குகிறது

ரொறன்ரோ - இன்று, நிதி அமைச்சர் Peter Bethlenfalvy *2024 வரவுசெலவுத் திட்டத்தை* வெளியிட்டார்: *சிறந்ததொரு ஒன்ராறியோவைக் கட்டியெழுப்புதல்.* உலகின் ஏனைய பகுதிகளைப் போலவே, அதிக வட்டி விகிதங்கள் மற்றும் உலகளாவிய ஸ்திரமின்மை காரணமாக ஒன்ராறியோ தொடர்ந்து பொருளாதார நிச்சயமற்ற நிலையை எதிர்கொண்டு வருகின்றது.

இந்த சவால்கள் ஒன்ராறியோக் குடும்பங்கள் மற்றும் அவர்களின் நிதிகள் அத்துடன் மாகாணத்தின் நிதிகள் மீதும் அழுத்தம் கொடுத்து வருகின்றன.  இந்த சவால்களின் மத்தியிலும், உட்கட்டமைப்பில் முதலீடு செய்வதன் மூலம் அதிக வீடுகளை விரைவாகக் கட்டியெழுப்புவதற்கும், அதிக சம்பளம் கிடைக்கும் சிறந்த வேலைகளை ஈர்ப்பதற்கும், குடும்பங்கள் மற்றும் வணிகங்களுக்கான செலவுகளைக் குறைப்பதற்கும், சமநிலைப்படுத்தும் பாதையைத் தக்கவைத்துக் கொள்வதற்கும், உரிய தனது கட்டுமானத் திட்டத்தை ஒன்ராறியோ தொடர்ந்து செயற்படுத்தி வருகின்றது (Plan to Build).

"உலகளாவிய பொருளாதார நிச்சயமற்ற தன்மை மற்றும் அதிக வட்டி விகிதங்கள் ஆகியன ஒன்ராறியோக் குடும்பங்களுக்குத் தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வருகின்ற வேளையில், வரிகளை உயர்த்தாமல் ஒன்ராறியோவின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கு முதலீடு செய்வதன் மூலம் எங்கள் அரசாங்கம் பொறுப்பான அணுகுமுறையை எடுத்து வருகிறது" என்று அமைச்சர் Bethlenfalvy கூறினார். "புதிய சாலைகள், நெடுஞ்சாலைகள் மற்றும் வட அமெரிக்காவின் மிகப்பெரிய பொதுப் போக்குவரத்து விரிவாக்கம் உள்ளிட்ட முக்கிய பொதுச் சேவைகள் மற்றும் உட்கட்டமைப்புகளில் நாங்கள் முதலீடு செய்வதால், கடினமாக உழைக்கும் ஒன்ராறியோக் குடும்பங்கள் அல்லது நகராட்சிகள், செலவுகளைக் குறைப்பதற்கு எங்களை நம்பியிருக்கும் நேரத்தில், அவர்கள் மீது அந்தச் செலவுகளைச் சுமத்துவதற்கு நாங்கள் மறுக்கிறோம்."

மாகாண நடவடிக்கைகளின் சிறப்பம்சங்கள் பின்வருமாறு:

- மேலதிகமான வீடுகளைக் கட்ட உதவுவதற்காகப் புதிய நகரசபை வீட்டு உட்கட்டமைப்புத் திட்டத்தில் (Municipal Housing Infrastructure Program) $1 பில்லியனை முதலீடு செய்தல் மற்றும் நகராட்சிகள் தங்கள் வீட்டு இலக்குகளை அடையத் தேவையான முக்கியமான உட்கட்டமைப்பைச் சரிசெய்து விரிவுபடுத்த உதவுவதற்காக, வீட்டுவசதி-இயக்க நீர் அமைப்புகள் நிதியை (Housing-Enabling Water Systems Fund) நான்கு மடங்காக, மொத்தம் $825 மில்லியனாக உயர்த்துதல்.
- சுமார் 600,000 பேரை முதன்மைச் சுகாதார சேவையுடன் இணைப்பதற்காக, மூன்று வருடங்களில் $546 மில்லியன் தொகையை மேலதிகமாக முதலீடு செய்தல்.
- ஒன்ராறியோ முழுவதும் உள்ள சமூகங்களை வலுப்படுத்தப் புதிய மற்றும் மேம்படுத்தப்பட்ட விளையாட்டு, பொழுதுபோக்கு மற்றும் சமூக வசதிகளில் முதலீடு செய்வதற்காக, $200 மில்லியன் தொகைக்கு ஒரு புதிய சமூக விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு உட்கட்டமைப்பு நிதியைத் (Community Sport and Recreation Infrastructure Fund) தொடங்குதல்
- நான்கு போலீஸ் ஹெலிகாப்டர்கள் வாங்குதல் உட்பட அதிகரித்த ரோந்து நடவடிக்கை மற்றும் பெரிய சம்பவங்கள் மற்றும் கடுமையான குற்றங்களுக்கு விரைவாகப் பதிலளிக்கும் நேரம் ஆகியவற்றை ஆதரிப்பதன் மூலம், ரொறன்ரோப் பெரும்பாகத்தில் சமூகப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக மூன்று ஆண்டுகளில் $46 மில்லியன் தொகையை முதலீடு செய்தல்.
- பெட்ரோல் வரி விகிதத்தை லிட்டருக்கு 5.7 சதங்கள் மற்றும் எரிபொருள் (டீசல்) வரி விகிதத்தை லிட்டருக்கு 5.3 சதங்கள் வரைத் தற்காலிகக் குறைப்புகளாக டிசம்பர் 31, 2024 வரை நீட்டிக்க முன்மொழிவதன் மூலம் மக்கள் மற்றும் வணிகங்களுக்கான செலவுகளைக் குறைத்தல். ஜூலை 2022 -இல் முதன்முதலில் இந்த விலக்குகள் அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து, சராசரியாக $320 தொகையை இது ஒன்ராறியோக் குடும்பங்களுக்குச் சேமித்துக் கொடுத்திருக்கும். மத்திய அரசின் கார்பன் வரி ஏப்ரல் 1, 2024 -இல் அதிகரிக்கப்படவுள்ளதால் இந்த நிவாரணம் மிகவும் முக்கியமானது.
- தொழிற் பயிற்சியாளர்கள் உட்படத் தொழிலாளர்கள் மற்றும் வேலை தேடுபவர்கள், தங்கள் வாழ்க்கையை முன்னேற்றுவதற்குத் தேவையான திறன்களைப் பெற உதவுவதற்காகத், திறன் மேம்பாட்டு நிதிப் பயிற்சி முறையில் (Skills Development Fund Training Stream) 2024–25 ஆம் ஆண்டில் மேலதிகமாக $100 மில்லியன் தொகையை முதலீடு செய்தல்.

- நிலையற்ற வீட்டு நிலைமைகளை எதிர்கொள்ளும் தனிநபர்களை ஆதரிப்பது அத்துடன் மனநலம் மற்றும் போதை அடிமைத்தனச் சவால்களைக் கையாள்வது ஆகியவற்றின் மூலம், எளிதில் பாதிக்கப்படக்கூடிய மக்களுக்கு உதவுவதற்கென வடிவமைக்கப்படும், பல்வேறு விதமான ஆதரவளிக்கும் வீட்டு முயற்சிகளுக்காக மூன்று ஆண்டுகளில் $152 மில்லியனை முதலீடு செய்தல்.

"எங்கள் பொறுப்பான அணுகுமுறை, ஒன்ராறியோக் குடும்பங்கள், தொழிலாளர்கள் மற்றும் நகராட்சிகளுக்கு ஆதரவளிக்கும் அதே வேளையில், சமநிலைப்படுத்தும் பாதையைத் தக்க வைத்துக் கொள்ளவும் எங்களை அனுமதிக்கிறது" என்று அமைச்சர் Bethlenfalvy கூறினார். "வலுமான சமூகங்களை உருவாக்கவும், எதிர்காலச் சந்ததியினருக்குச் சிறந்த வாய்ப்புகளை வழங்கவும் நாங்கள் விவேகத்துடன் முதலீடு செய்வோம்."

## *விரைவுச் செய்திகள்*

- 2023–24 -க்கு, அரசாங்கம் $3.0 பில்லியன் பற்றாக்குறையைக் கணிப்பிட்டுள்ளது. சமநிலைப்படுத்தும் பாதையின் ஒரு பகுதியாக, அரசாங்கம் 2024-25 -இல் $9.8 பில்லியன் தொகையும் 2025-26 -இல் $4.6 பில்லியன் தொகையும் பற்றாக்குறையாக இருக்கும் என்று கணிப்பிட்டுள்ளது.
- ஒன்ராறியோவின் உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி, (GDP) 2023 -இல் சுமார் 1.2 சதவிகிதத்தால் வளர்ச்சியடைந்துள்ளதாகவும் 2024 -இல் 0.3 சதவிகிதம், 2025 -இல் 1.9 சதவிகிதம், 2026 -இல் 2.2 சதவிகிதம் மற்றும் 2027 -இல் 2.2 சதவிகிதம் ஆகியவற்றால் அதிகரிக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. நிதித் திட்டமிடல் நோக்கங்களுக்காக, இந்தக் கணிப்புகள் யாவும், தனியார் துறைக் கணிப்புகளின் சராசரியை விடச் சற்றுக் குறைவாக உள்ளன.

மேலதிக வளங்கள்

*2024 வரவுசெலவுத் திட்டத்தை: சிறந்ததொரு ஒன்ராறியோவைக் கட்டியெழுப்புதல்*

*2024 வரவுசெலவுத் திட்டத்தின்* சிறப்பம்சங்களை வாசிக்கவும்

*பின்னணியில் (Backgrounder): பொருளாதார மற்றும் நிதி மதிப்பாய்வு*

*2023 ஒன்ராறியோப் பொருளாதாரக் கண்ணோட்டம் மற்றும் நிதி மதிப்பாய்வை வலுவான ஒன்ராறியோவை ஒருமித்துக் கட்டியெழுப்புதல்*

ஊடகத் தொடர்புகள்

Colin Blachar
**அமைச்சர் அலுவலகம்**
416-325-0400
Colin.Blachar@ontario.ca

Scott Blodgett
**தகவற் தொடர்புப் பிரிவு**
416-728-9791
Scott.Blodgett@ontario.ca

ontario.ca/finance-news
*Disponible en français*